யாருக்காக இவர்கள் ஆட்சி செய்கிறார்கள்?

பண்டிகைக் காலங்களில் சென்னை போன்ற பெரிய நகரங்களிலிருந்து பொது மக்கள் தங்கள் சொந்த ஊருக்குப் பெருமள வில் செல்வது வழக்கம். விடுமுறைக்கால பயண வசதிக்கேற்ப அவர்களுக்கான பேருந்துகளை ஏற்பாடு செய்ய வேண்டியது போக்குவரத்துத் துறையின் கடமை. எந் தெந்த வழித்தடங்களில் அதிகமான பேருந் துகள் தேவைப்படுகின்றன என்பதைக் கவ னித்து அதற்கேற்ப உடனுக்குடன வசதி களைச் செய்து தந்தால்தான் பொதுமக்கள் நிம்மதியாக ஊர்ப் போய்ச் சேர முடியும். இதில் கட்டணக் கொள்ளையையும் தடுக்க வேண்டிய கடமை போக்குவரத்துத் துறைக்கு உள்ளது.

தி.மு.க ஆட்சிக்காலங்களில் போக்குவரத் துத் துறை அமைச்சர்களாக இருந்த முனை வர் பொன்முடி, திரு.கே.என்.நேரு, திரு.எஸ். எஸ்.சிவசங்கர் ஆகியோர் தீபாவளிப் பண் டிகை நேரங்களில் சென்னை கோயம்பேடு, கிளாம்பாக்கம் பேருந்து முனையங்களிலும் மற்ற இடங்களிலும விடிய விடியப் பார்வை யிட்டு, உரிய வகையில் பேருந்து ஏற்பாடு களைச் செய்து தருவார்கள். தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களும் அதைக் கடைப்பிடிக்க வேண்டிய தாயிற்று. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைத் தேவையான அளவு இயக்குவதுடன், தனியார் ஆம்னி பஸ்க ளின் கட்டணக் கொள்ளையைத் தடுக்கின்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். மக் களுக்கு தனியார் பஸ்களின் தேவையின்றி, அரசு சார்பிலேயே நவீன வசதிகள் கொண்ட பேருந்துகளை இயக்கி அவரவர் ஊர்களுக் குப் போகச் செய்தது திராவிட மாடல் அரசு.

தற்போதைய ஆட்சி எல்லாவற்றிலும் தலைகீழாக இருக்கிறது. பண்டிகைக்கால விடுமுறை நாட்களாக இருந்தாலும், வார இறுதியிலான தொடர் விடுமுறை நாட்களாக இருந்தாலும் அரசுப் பேருந்துகள் போதிய அளவில் இயக்கப்படவில்லை என்று பொது மக்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார் கள். தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இத்தகைய புகார்கள் நேரடியாகவோ சமூக வலைத் தளங்களிலோ வெளிப்பட்டால் சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர், அதிகாரிகள் உட னடியாகத் தலையிட்டு, தேவையான அள வில் பேருந்து வசதிகளைச் செய்து தரு வார்கள். தீபாவளி நேரத்தில் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் கடைசிப் பயணி தன் ஊருக்குப் புறப்படும்வரை அங்கேயே இருந்து பேருந்து வசதிகளைக் கவனித்து, வழியனுப்பிவிட்டுக் கிளம்பியவர் திராவிட மாடல் அரசின் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள்.

த.வெ.க ஆட்சியில் பண்டிகை விடுமுறைக் காலங்களில் போதிய பேருந்து வசதிகள் இல்லை என்று புகார்கள் வெளிப்பட்டால், இந்த அரசு உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. மாறாக, பொதுமக்கள் ஊருக்குப் போன பிறகு மறுநாள் த.வெ.க.வின் சமூகவலைத் தளக் கூலியாட்கள் பேருந்து நிலையங்க ளுக்குச் சென்று, "பாருங்கள்.. கூட்டமே இல்லை. பஸ் காலியாகத்தான் இருக்கிறது" என்று வீடியோ எடுத்து ரீல்ஸ் போடுகிறார்கள். பழியை எதிர்க்கட்சிகள் மீதும் பொதுமக்கள் மீதும் போடுகிறார்கள். ஆட்சியின் அவலட்ச ணத்தை ரீல்ஸ் மேக்கப் போட்டு மூடி மறைக் கப் பார்க்கிறார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சராக உள்ள தமிழன் பார்த்தீபன் யாருக்காக வேலை பார்க்கிறார் என்பதே புரி யவில்லை.

ஓர் இளைஞர் தனது ஊருக்கான பஸ் வசதி கேட்டு அமைச்சரிடம் முறையிட்ட போது, "தம்பி.. நீ சாப்பிட்டிருக்கே.. நான் இன்னும் சாப்பிடல" என்று சம்பந்தமில்லா மல் பேசினார். அதன்பின், "டிக்கெட் ரிசர்வ் செய்துள்ள பயணிகள் காத்திருங்க. ரிசர்வ் செய்யாதவங்க வண்டியில ஏறுங்க" என்று உல்டாவாக முறையை மாற்றி அறிவித்தார். தற்போது தீபாவளி பண்டிகை நேரத்தில், தனியார் ஆம்னி பேருந்துகளின் அநியாயக் கட்டணக் கொள்ளை குறித்து பயணிகள் பல ரும் புகார் தெரிவித்துள்ள நிலையில், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள் வதற்குப் பதிலாக, ஆம்னி பஸ் உரிமையா ளர் போல அவர்களுக்கு புரமோஷன் கொடுத்துப் பேசியிருக்கிறார்.

"ஆம்னி பஸ்ஸில் ஸ்லீப்பர் இருக்கிறது. அதனால் தூங்குவதற்கு வசதி இருக்கிறது. ஏ.சி இருக்கிறது. ஸ்க்ரீன் க்ளாத் இருக்கிறது. தண்ணீர் பாட்டில் தருகிறார்கள். ஸ்நாக்ஸ் தருகிறார்கள்" என்று த.வெ.க அமைச்சர் பேசியதைக் கேட்ட ஊடகத்தினர், இவர் மந்தி ரியா? ஆம்னி பஸ் ஓனரா? என்று அதிர்ச்சிய டைந்து விட்டார்கள். ஒரு நிருபர், "நீங்க சொல்ற வசதிகள் தீபாவளிக்காகச் செய்யப் பட்டதல்ல. ஆம்னி பஸ்களில் எப்போதும் அந்த வசதிகள் இருக்கிறது. ஆனால், பண்டிகைக் காலங்களில் மட்டும் ஏன் அதிகக் கட்டணம் வசூலிக்கிறார்கள்?" என்று கேட்டதற்கு



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

த.வெ.க அமைச்சரிடம் தடுமாற்றமே பதிலாக வெளிப்படுகிறது. மக்களுக்கான பேருந்துச் சேவையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய த.வெ.க அரசு யாருக்கான ஏஜன்ட்டாகச் செயல்படுகிறது?

பேருந்து வசதிகள் தொடர்பான பிரச்சி னையில் மட்டுமல்ல. மக்களின் அன்றாடத் தேவைகள் எதுவாக இருந்தாலும், தமிழ் நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் குற்றச் செயல்களாக இருந்தாலும் த.வெ.க. அரசு தனது சமூக வலைத்தளக் கூலியாட்களை வைத்து, பாதிக்கப்பட்டவர்கள் மீதே பழிபோ டும் வேலையைத்தான் செய்து வருகிறது. விஜய் முதலமைச்சரான இரண்டு வாரத்திற் குள்ளாக கோவை சூலூர் பகுதியில் ஒரு சிறுமி பாலியல் தொல்லைக்குள்ளாக்கப் பட்டு, கொலை செய்யப்பட்டார். தமிழ்நாடே அந்தக் கொடூரச் செய்தியறிந்து பதறியது. தன்னை தாய்மாமன், அண்ணன் என் றெல்லாம் தானாகவே சொல்லிக்கொள்ளும் விஜய்யிடமிருந்து வெற்று அறிக்கை வந் தது. அதே நேரத்தில், அவருடைய கட்சியி னர் சமூக வலைத்தளங்களில் இந்தப் பிரச் சினையைத் திசை திருப்பும் வகையில், பாலியல் தொல்லைக்குள்ளாகி இறந்து போன சிறுமியின் தாய் மீது அவதூறுக ளைப் பரப்பும் வேலைகளை மட்டுமே செய்து கொண்டிருந்தார்கள்.

கோவை சூலூர் சிறுமிக்கு நேர்ந்த கொடூ ரத்திற்குப் பிறகு பல ஊர்களிலும் சிறுமிகள், பெண்கள், மூதாட்டிகள் என அனைத்து வயது மகளிரும் தொடர்ந்து பாலியல் தொல் லைகளுக்குள்ளாகி வருகிறார்கள். சில குற் றங்களில் த.வெ.க.வினர் நேரடியாகவும், சிலவற்றில் மறைமுகமாகவும் தொடர்புடையவர்களாக இருக்கி றார்கள். உரிய நடவடிக்கை களை விஜய் அரசு எடுப்ப தில்லை. திண்டி வனம் அருகே செஞ்சியில் ஒரு சிறுமி காணா மல் போய் 25 நாட்கள் கடந்து விட்டது. உள்ளூர் போலீஸ் விசாரணை, சி.பி.சி.ஐ.டி. போலீஸ் விசாரணை எனக் காலத்தைக் கடத்துகிறார்களே தவிர, துப்பு எதுவு மில்லை.

பொதுமக்களை மின்வெட்டு வாட்டி வதைக்கிறது. இரவு நேரங்களில் தூங்க முடிய வில்லை. பகல் நேரத்தில் மின்விசிறி தொடங்கி, மின்சாரத்தால் இயங்கக்கூடிய சாதனங்களை இயக்க முடியவில்லை. அத னைக் கவனித்து சரி செய்ய வேண்டியது த.வெ.க அரசின் கடமை. மின்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் கலெக்ஷன் குமார் எனப் படும் அமைச்சர் நிர்மல்குமார் தன்னுடைய பொறுப்பை மறந்துவிட்டு, "இது தி.மு.க. வினரின் சதி. மின்வாரியத்தில் வேலை பார்க்கும் தி.மு.க.வைச் சேர்ந்த ஊழியர்கள் கரண்ட் கட் செய்து விடுகிறார்கள். டிரான்ஸ் பார்மர்களில் உள்ள ஃப்யூஸ் கட்டைகளைத் தி.மு.க.வினர் திருடிக் கொண்டு போய் விடு கிறார்கள்" என்று அருவருக்கத்தக்கப் பொய்ப் பழிகளைச் சுமத்தினாரே தவிர, இன்றுவரை சீரான மின்சார விநியோகத் திற்கு த.வெ.க அரசு எந்த நடவடிக்கையும் உருப்படியாக எடுக்கவில்லை.

அண்டை மாநிலமான கேரளாவும் ஆந்திரா வும் தங்களுக்குத் தேவையான மின்சாரம் குறித்து கணக்கிட்டு, முன்கூ கூட்டியே அதற் கான ஏற்பாடுகளை மேற்கொண்டு, குறைந்த விலையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய் யும் நிலையில், தமிழ்நாட்டை ஆளும் த.வெ.க அரசு இதுவரை எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் மிக அதிகப்படியான விலைக்கு மின் சாரத்தை வாங்கும் நிலைமைக்குச் சென்றி ருக்கிறது. இது பற்றிக் கேட்டாலும், எது பற் றிக் கேட்டாலும், 'தி.மு.க.. தி.மு.க... தி.மு.க..' என்றுதான் கலெக்ஷன் குமார் பதில் சொல்கி றாரே தவிர, மக்களின் அன்றாட இயக்கத் திற்கு அத்தியாவசியமான மின்துறை தன் பொறுப்பில் இருப்பதைப் பற்றித் துளியும் அக் கறையில்லை.

தலை எந்தத் திசையில் ஆடுகிறதோ அதே திசையில் உடம்பும் வாலும் ஆடுகிறது. விஜய் எதற்கெடுத்தாலும் தி.மு.க மீது பழி போட்டார். எப்போது மேடை ஏறினாலும், அல்லது எப்போதாவது மேடை ஏறினாலும் தி.மு.க மீது பழி போடுவதுதான் அவரது ஒரே ஸ்கிரிப்ட். அவருடைய அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் கட்சி நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் அதே ஸ்கிரிப்ட்தான். தங்களிடம் சிக்கிக் கொண்டிருக்கும் ஆட்சியின் கரங்க ளில் தமிழ்நாட்டு மக்கள் சிக்கி சின்னா பின் னமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றிய கவலையே கிடையாது.

த.வெ.க. ஆட்சியின் சீர்கேடுகளால் பாதிக் கப்பட்டவர்களின் குடும்பத்தினர், போராடும் மாணவர்கள், கோரிக்கைகளை வலியுறுத் தும் அரசு ஊழியர்கள், வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரும் விவசாயிகள், பேருந்து வசதிகள் கோரும் பயணிகள் உள் ளிட்ட பொதுமக்கள் மீதே பழிபோடப்படுகிறது. மக்களைப் பலிகடாக்களாக்கிவிட்டு, யாருக் காக இவர்கள் ஆட்சி நடத்துகிறார்கள்?

பண்டிகையையொட்டி சொந்த ஊருக்குச் செல்லும்

மக்கள் பஸ்-ரயில்கள் கிடைக்காமல் திண்டாட்டம்!

சென்னை, நவ.7-

தீபாவளி பண்டிகை நாளை கொண்டாடப்பட உள்ளது. இதை யொட்டி சென்னையில் வசிப்ப வர்கள் நேற்று முன்தினம் முதல் சொந்த ஊர்களுக்கு செல்ல தொடங்கினர். ஒரே நேரத்தில் மக்கள் படையெடுத்ததால் பஸ், ரயில்களில் இடம் கிடைக்காமல் கடும் அவதிக்குள்ளாகினர். அதே நேரத்தில் தமிழகம் முழுவதும் துணி கடைகளில் கூட்டம் அலைமோதுகிறது. இதேபோல பட்டாசு விற்பனையும் களை கட்ட தொடங்கியுள்ளது. இன்றும் ல ட் ச க் க ண க் க ா னோ ர் பயணம் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில் தீபாவளி பண்டிகைக்கு நாளை ஒரு நாள் மட்டுமே எஞ்சியுள்ளதால், இறுதிக்கட்ட விற்பனை தமிழகம் முழுவதும் நேற்று காலை முதல் விறுவிறுப்பு அடைந்தது. சென்னையை பொறுத்தவரை முக்கிய வணிக பகுதிகளான தி.நகர், புரசைவாக்கம், பிரோட்வே, மயிலாப்பூர், வண்ணாரப் பேட்டை, தாம்பரம், குரோம் பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதல் மக்கள் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக காணப்பட்டது.

சென்னையில் வசிக்கும் வெளி மாவட்ட மக்கள் தீபாவளி கொண்டாட தங்கள் சொந்த ஊருக்கு செல்வதை வழக்கமாககொண்டுள்ளனர். 60 நாட்களுக்கு முன்பே ரயில்களில் டிக்கெட் முன்பதிவு செய்தனர். ஒவ்வொரு ரயில்களிலும் 200க்கும் அ தி க ம ா னே ா ர் காத்திருப்போர் பட்டியலில் இருந்து வருகின்றனர். பல ரயில்களில் மேற்கொண்டு டிக்கெட் எடுக்க முடியாத அளவுக்கு 'ரெக்ரெட்' நிலை இருந்து வருகிறது. பண்டிகைக்கு முன்னரும், பின்னரும் அனைத்து ரயில்களிலும் இதே நிலை தான் நீடித்து வருகிறது. மேலும் அரசு மற்றும் தனியார் பஸ்களிலும் ஏராளமானோர் டிக்கெட் முன்பதிவு செய்துள்ளனர்

அ து ம ட் டு ம ல் ல ா ம ல் தீபாவளி பண்டிகைக்கு மறுநாள் திங்கட் கிழமை தமிழக அரசு சார்பில் விடுமுறை அளிக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து சனி, ஞாயிற்றுக் கிழமை என்று தொடர்ந்து 3 நாட்கள் விடுமுறை வருகிறது. அதே நேரத்தில் நேற்று பெரும்பா லான தனியார் கல்லூரிகள் மாணவர்களுக்கு விடுமுறை விட்டுள்ளது. இதனால், தீபாவளியை உற்சாக மாக கொண்டாடும் வகையில் நேற்று மாலை முதல் மக்கள் சென்னையில் இருந்து புறப்பட தொடங்கினர். இதனால், நேற்று மாலை முதல் சென்னை எழும்பூர், சென்ட்ரல், தாம்பரம் ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் அனைத்து ரயில்க ளும் ஹவுஸ் புல் ஆனது. இன்றும், நாளையும் ரயில் நிலையங்களில் கூட்டம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. பல லட்சம் பேர் சொந்த ஊர் செல்ல திட்ட மிட்டுள்ளனர்.

ஆம்னி பஸ் கட்டணம் உயர்வு!

ஆம்னி பஸ்களை பொறுத்த வரை, திருநெல்வே லிக்கு செல்ல ரூ.2500 கட்டணம் அறிவித் துள்ளனர். கோவைக்கு ரூ.2400 அறிவித்துள்ளனர். ஆனால் டிமாண்ட் காரண மாக ரூ.4 ஆயிரம் முதல் ரூ.4500 வரை வசூலிக் கப்படுவதாக புகார்கள் எழுந் துள்ளன. இந்த கட்டணம் மேலும் அதிகரிக்கும் என்று எ தி ர் பா ர் க் க ப் ப டு கி ற து . இதனால் பொதுமக்கள் இந்த தீபாவளியை சொந்த ஊரில் கொண்டாட கடும் போராட்டத்தை சந்திக்க வேண்டிய சூழ்நிலை தான் தற்போது உருவாகி யுள்ளது.

மேலும், பட்டாசு, ஸ்வீட் கடைகளிலும் மக்கள் நீண்ட வரிசையில் நின்று பொருட்களை வாங்கி சென்ற காட்சியை காண முடிந்தது.

காசிமேட்டில் மீனவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்த

அமைச்சர் ஸ்ரீநாத்தை முற்றுகையிட்டு மீனவர்கள் வாக்குவாதம்!

சென்னை, நவ. 7-

நடுக்கடலில் புயலில் சிக்கி உயிரிழந்த மீனவர்க ளின் உடலுக்கு அஞ்சலி செலுத்தவந்த த.வெ.க. அமைச்சர் ஸ்ரீநாத்தை, முற்றுகையிட்டு மீனவர் குடும்பத்தினர் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். த.வெ.க. அரசின் அலட்சி யத்தால் 9 மீனவர்களின் உயிர் பறிபோய்விட்ட தாக வேதனை தெரிவித் துள்ளனர்.

கடந்த மாதம் 27ம் தேதி, சென்னை காசி மேடு பகுதியை சேர்ந்த 9 மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். முரசு புயல் ஆந்திர மாநி லம் அருகே கரையை கடக்கக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்தபோது, இவர்கள் நிஜாம் பட்டி னம் துறைமுகம் அருகே மீன் பிடித்துக் கொண்டி ருந்ததாக தெரிகிறது. புயல் கரையைக் கடந்த பின் தமிழக மீனவர்களி டமிருந்து எந்த தகவலும் வராததால், அதிர்ச்சிய டைந்த அவர்களது உறவி னர்கள், மீனவர்களை காப்பாற்றுமாறு த.வெ.க. அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், விஜய் அரசின் மெத்தனத்தால் 9 மீனவர் களும் புயலில் சிக்கி உயிரி ழந்தனர். அவர்களது உடல் ஆந்திரா அருகே கரை ஒதுங்கியது. மீனவர் களின் உடல் குடும்பத்தினரிடம் ஒப்ப டைக்கப்பட்டு, காசிமேட் டில் உள்ள அவர்களது இல்லத்தில் வைக்கப்பட் டுள்ளது.


இந்நிலையில், மீனவ ரின் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்த மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத், ராயபுரம் த.வெ.க. எம்.எல்.ஏ., தாமு ஆகியோரை மீன வர்கள் முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட் டனர்.

அமைச்சரிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டவர் களை போலீசார் அங்கி ருந்து இழுத்துச் சென்றனர். இதனால் மீனவர்கள் ஆத்தி ரமடைந்து அதிகாரிகளிடம் சரமாரி கேள்வி எழுப்பினர். மீனவர்கள் உடல் கரை ஒதுங்கியது குறித்து நாங்கள் சொன்னபின்தான் அதிகாரி களுக்கு தெரியவந்ததாக அவர்கள் குற்றம் சாட்டி னர்.

த.வெ.க. அரசின் அலட் சியத்தால் 9 மீனவர்களின் உயிர் பறிபோய்விட்டதாக வும் வேதனை தெரிவித்த னர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முனைவர் மா. நன்னன்
நவம்பர் 7 (2017)



தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் பாவேந்தர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் அன்பழகனார் ஆகியோரோடு நட்புக் கொண்டு, பகுத்தறிவுக் கொள்கைப் பாதையில் தொடர்ந்து பயணித்தவர்.

தொடக்கப்பள்ளி முதல் படிப்படியாக உழைப்பால் உயர்ந்து, கல்லூரிப் பேராசிரியர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் எனப் பணியாற்றி பல பெருமைகளைப் பெற்றவர்.

திராவிட இயக்கம், சுயமரியாதை, தன்மானம், பகுத்தறிவு, தமிழ் மொழி ஆகியவற்றில் பற்றுக்கொண்டு வாழ்ந்தவர். இளைஞர்களுக்கு திராவிட இயக்க உணர்வுகளை ஊட்டி தமிழ்த் தொண்டு ஆற்றி வந்தவர். கழகத்தின் தொடக்க காலத்திலிருந்தே உறுப்பினராக இருந்தவர். கழக தலைமை இலக்கிய அணியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, கழக இளைஞர் அணி சார்பில் தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஒவ்வொரு "பயிற்சி பாசறை" வகுப்புகளில் பங்கேற்று சமூகநீதி, திராவிட இயக்கம், சுயமரியாதை பற்றி கழக இளைஞர் அணியினருக்கு விளக்கியவர்.

1991–ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் "பெரியார் விருது" பெற்றவர். அத்துடன் இவரது தமிழ்ப் பணிக்காக "தமிழ்ச் செம்மல் விருது", "திரு.வி.க. விருது" ஆகிய விருதுகளை பெற்றவர்.

தம் வாழ்நாளில் பெரும் பகுதியை தமிழ்மொழி கற்பித்தல், வளர்த்தல், பிழை திருத்தல், செம்மைப் படுத்துதல் என்ற முறையில் பணியாற்றி, பகுத்தறிவு நெறி தழுவி வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; த.வெ.க. ஆட்சியில், மின்சார கொள்முதல், சைக்கிள் கொள்முதல் இப்படி எல்லா கொள்முதல்களிலும் கோடிக் கணக்கில் கொள்ளைன்னு செய்தி வருதே! உண்மையா இருக்குமா?

போண்டி : **ஆமாய்யா; அப்படித் தான் செய்தி வருது. ஆனால் இது தான் "தூய ஆட்சி" ஆயிற்றே! அப்படின்னு நினைச்சா நாம் தான் ஏமாளி. 'கலெக்சன்' குமாருக்கு நான் ஒன்றும் தாழ்ந்து போகலேன்னு 'கமிஷன்' ராஜா கொக்கரிக்கராராம். ஆமாம், ஜோசப் விஜய்க்கு தெரியாமல்தான் இதெல்லாம் நடக்குதுன்னு நினைக்கிறயா?**